பாடம் 23

புனித டொமினிக் சாவியோ.



பாடசாலை முடிந்து வீடு நோக்கி வந்த நிமல் சிந்தனைதயில் ஆழ்ந்திருந்தான். சற்று நேரத்தில் புத்தக அலுமாரியை இழுக்கத் தொடங்கினான். மலர்ந்த முகத்துடன் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்து புத்தகத்தைப் புரட்டினான்.

அடுத்த நாள் காலை, பாடசாலைக்குச் சென்ற நிமல், தாசனைக் கூவி அழைத்தான். தன் கையிலிருந்த புத்தகத்தைக் காட்டினான். கையிலிருந்த புத்தகத்தின் பெயர் "புனித டொமினிக் சாவியோ".

முதல் நாள் மறைக்கல்வி வகுப்பில் "புனித டொமினிக் சாவியோவின் வாழ்க்கை வரலாறு" கற்பிக்கப்பட்டது. எனவே, அவன் வீட்டிலிருந்த புத்தகத்தைக் கொண்டு வந்து நண்பர்களுடன் சேர்ந்து வாசித்தான்

இத்தாலியில் மூர்த்தான என்னும் நகரில் முறி அல்டோ என்னும் கிராமத்தில் 1842 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் சாள்ஸ் சாவியோ. தாய் பிறிஜட். சிறு வயதில் அமைதியான சூழலில் சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்த இவர் பெற்றோரின் வழி நடத்தலினால் இறை பக்தி உள்ளவராக இருந்தார். இறை ஒளியையும் இறை கொடைகளையும் பெற்றார்.

சிறு வயதிலிருந்தே காலைத் திருப்பலியில் பங்கு கொள்வார். திருப்பலிப் பூசைக்கு உதவி செய்வார். சில நாட்களில் அவர் கோயிலுக்கு வரும்போது கோயில் கதவு முதலாய்த் திறந்திருக்காது. பூசை முடிந்த பின்னர் ஆலயத்தில் சற்று நேரம் தங்கியிருந்து செபிப்பார்.

மழை, வெய்யில், சூடு, குளிர் என்று பாராமல் ஆலய வேலைகளில் ஈடுபடுவார்.

அவருக்கு 7 வயது நடக்கும் போது தனக்குத் தேவநற்கருணை தருமாறு ஆலயப் பங்குத் தந்தையிடம் கேட்டார். அதற்கு 12 வயதாக வேண்டும் என்று அருட் தந்தை கூறினாலும், அவர் பக்தியுள்ளவராக இருப்பதனால் ஒரு பரிசாகத் "தேவ நற்கருணை" வழங்குவதாகக் கூறினார். அதைக் கேட்ட அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அன்று தொடக்கம் ஒவ்வொரு நாளும் மிகவும் பக்தியுடன் இயேசுவைப் பெற்றுக் கொண்டார்.

ஒரு நாள் வகுப்பு நண்பர்கள் பிழை செய்துவிட்டு அந்தப் பிழையை இவர் மேற் சுமத்தினார்கள். செய்யாத பிழைக்கு டொமினிக் தண்டிக்கப்பட்டார். பின் அப்பிழையை அவர் செய்ய வில்லை என்பதை ஆசிரியர் அறிந்தார். செய்யாத பிழைக்கு ஏன் தண்டனை அனுபவித்தீர்கள்? என்று ஆசிரியர் கேட்ட போது, இயேசு ஒரு குற்றமும் செய்யாமல் தண்டனை அனுபவித்தார். நான் இயேசுவைப் பின்பற்றுகிறேன் என்றார்.

ஒரு "குருவாக" வேண்டும் என்ற ஆசை தம்மிடம் இருப்பதாகப் பங்குத் தந்தையிடம் டொமினிக் கூறினார். பாடசாலை வேலைகளை ஒழுங்காகச் செய்து முன்மாதிரிகையான மாணவனாக விளங்கினார். புனித டொன் பொஸ்கோ அவ் வழியாக வரும் போது

டொமினிக்கின் ஆலயத்தையும் தரிசித்தார். அப்போது பங்குத் தந்தை குருவாக வேண்டும் என்ற ஆசையுடனிருக்கும் டொமினிக்கை அவரிடம் அனுப்பினார். அவர் டொமினிக்கைப் பற்றி அறிவதற்காகச் சில விடயங்களை மனனம் செய்து கொண்டு வருமாறு கூறினார்.

10 நிமிடங்களில் மீண்டும் அவரிடம் வந்த டொமினிக் எந்த விதமான குறைபாடும் இல்லாமல் எல்லாவற்றையும் ஒப்புவித்தார்.

அடுத்த நாளே புனித டொன்பொஸ்கோ அவரைத் தமது இல்லத்தில் சேர்த்துக் கொண்டார். இறைவனை அன்பு செய்வதும், சேவை செய்வதும் மற்றவர்களுக்கு அறிவை வழங்குவதும் மிக முக்கியமான சேவை என்பதை உணர்ந்தார். அந்த இல்லத்தில் இருக்கும் வரை சொல்லாலும், செயலாலும் முன் மாதிரிகையாக விளங்கினார். படிக்க வேண்டிய நேரத்தில் படித்தார். விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடினார்.

சில காலங்களின் பின்னர் அவர் கடும் நோய்வாய்ப்பட்டார். ஆகவே, அவருக்கு மருத்துவம் செய்வதற்காக அவரை, அவர் பெற்றோரிடம் அனுப்பி வைத்தார்கள். வீட்டிலும் அவர் மிகவும் தூய்மையாக வாழ்ந்ததுடன் செப வாழ்விலும் ஈடுபட்டிருந்தார்.

மிகவும் பயபக்தியுடன் தேவநற்கருணை பெற்றுக் கொண்ட இவர், 1857 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆந்திகதி இறைவனடி சேர்ந்தார்.

முதற் தேவநற்கருணை பெறும் பிள்ளைகளின் பாதுகாவலரான புனிதராக இவர் கருதப்படுகின்றார், என்று வாசித்து முடித்த நிமல் புத்தகத்தை மூடினான். கதையைக் கேட்டுக் கொண்டிருந்த ஏனைய மாணவர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

நாமும் டொமினிக் சாவியோவைப் போன்று முன்மாதிரிகை யான பிள்ளைகளாக வாழ்வோம்.

ஒப்படை :

1. புனித டொமினிக் சாவியோவிடம் காணப்பட்ட நற்பண்புகள் 4 தருக.
2. அவரின் பண்புகளை அறிந்து கொண்ட நீர் எவ்வாறு வாழ்வீர் என எழுதுக.